## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

செ.வெ.எண்.401 நாள்: 18.08.2026

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், இன்று (18.08.2026) காணொலிக் காட்சி வாயிலாக தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு.எம்.ஏ. சித்திக், இ.ஆ.ப., தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர் திரு.வி. அருண் ராய், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., இணை ஆணையாளர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி சித்ரா விஜயன், இ.ஆ.ப., நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத்துறை, மாநகராட்சியின் தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள் உள்ளிட்ட துறைகளின் அலுவலர்கள் காணொலிக் காட்சியின் வாயிலாக பங்கேற்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், இப்பணிகளை மேற்கொண்டு வரும் பெருநகர சென்னை மாநகராட்சி, நீர்வளத்துறை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகம், நெடுஞ்சாலைத்துறை உள்ளிட்ட பிற சேவைத் துறைகள் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளை துரிதமாக மேற்கொள்ளவும், இணைப்புகள் இல்லாத மழைநீர் வடிகால்களில் இணைப்புகளை ஏற்படுத்தும்

பணிகளை விரைந்து மேற்கொள்ளவும், ஆறுகள் மற்றும் கால்வாய்களில் ஆகாயத்தாமரைகள் அகற்றுதல், தூர்வாரும் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகள், கால்வாய்களை உயர்த்திக் கட்டுதல், மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள், மழைநீர் தேங்கக்கூடிய பகுதிகளில் மின் பெட்டிகளை உயரமாக மாற்றியமைத்தல், அபாயகரமாக உள்ள மரங்களின் கிளைகளை கத்தரித்து அகற்றுதல், சென்னை மெட்ரோ பணிகள் நடைபெறும் இடங்களில் மழைநீர் தங்குதடையின்றி செல்லும் வகையில் மழைநீர்வடிகால் அமைத்தல் மற்றும் தேங்கும் மழைநீரை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், ஒக்கியம் மடுவில் நடைபெற்று வரும் பணியினை விரைந்து முடித்து தண்ணீர் எளிதில் வெளியேறும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், போக்குவரத்து காவல்துறையின் ஒத்துழைப்புடன் சாலைகளின் குறுக்கே மழைநீர் வடிகால் இணைப்பை மக்களுக்கு இடையூறின்றி ஏற்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுதல், மழைநீர் தேங்கும் இடங்களில் மோட்டார் பம்புகளை தயார்நிலையில் வைத்தல், சுரங்கப்பாதைகளில் தண்ணீர் தேங்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பணிகள் நடைபெறும் இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் தொடர்புடைய சேவைத் துறைகளுடன் ஒருங்கிணைந்து மேற்கொண்டு பருவமழைக்கு முன்னதாக விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**